


FREE EDITION

October - 2012

# ஜோதி

## ஆன்மிகச் செய்திச்சுடர்

ஜோதி 6: சுடர் 08 - 68

# Jothi

## Spiritual Newsletter

மூல மந்திரம்

ஓம் சக்தியே
பராசக்தியே
ஓம் சக்தியே
ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே
மருவூர் அரசியே
ஓம் சக்தியே
ஓம் விநாயகா
ஓம் சக்தியே
ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே
ஓம் பங்காருகாமாட்சியே
*

### ஆண்டாண்டு காலமாய் அன்னை காட்டும் அற்புதம்

நவராத்திரி விழாவின் போது அன்னை,அருள்திரு அடிகளாரை வயமாக்கிக் கொண்டு தானே அகண்ட விளக்கை ஏற்றி வைக்கிறாள். நவராத்திரி விழாவிற்கு முதல்நாளே நடைபெறும் நிகழ்ச்சி இது!

புற்று மண்டபத்திலிருந்து அன்னை கருவறைக்கு வரும்போது எல்லாச் செவ்வாடைத் தொண்டர் கள் மனத்திலும் ஓர் பக்திப் பரவசம்! பரபரப்பு!

ஒவ்வொரு ஆண்டும் நம் போன்ற தொண்டர்களைக் கொண்டுதானே அகண்ட விளக்கை ஏந்தி வரச் சொல்கிறாள்?

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

# அன்னை அருளிய சக்கரங்களும்

### கும்பகோணம் மகாமகக் குளக்கரையில் நாட்டு நல வேள்வி

1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி கும்பகோணம் மகாமகக் குளக்கரையில் நாட்டு நல வேள்வி நடைபெற்றது.

கும்பகோணம் மகாமகக் குளத்தில் கூட்ட நெரிசலின் காரணமாக நூற்றுக்கணக்காணோர் பலியானார்கள் என்ற செய்தியைத் தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அந்தத் துயரச் சம்பவத்திற்குப் பிறகு, “அங்கே நாம் நாட்டுநல வேள்வி ஒன்றை நடத்த வேண்டும். அதனை நாமே வந்து நடத்த வேண்டும்” என்று அடிகளார் அவர்கள் கூறியிருந்தார்கள்.

5.11.1992 அன்று அடிகளார் அவர்களின் ஆணைப்படி அந்த மகாமகக் குளக்கரையில் வேள்வி நடைபெற்றது.

# வேள்விகளும்

பகுதி - 4

### ஒன்பது யாக சாலைகள்

அந்த மகாமகக் குளக்கரையைச் சுற்றி ஒன்பது இடங்களில் பந்தல் வேயப்பட்டு யாக சாலைகள் நிறுவப்பட்டன. நான்கு திசைகட்கு நான்கு யாக சாலைகள், நான்கு மூலைகளுக்கு நான்கு யாக சாலைகள், நடு மையத்தில் ஒன்று. ஆக மொத்தம் ஒன்பது யாக சாலைகள்.

### மையமான யாகசாலை

குளக்கரையின் மையத்தே குருகலசம் நிறுவப்பட்டிருந்தது. அது மேருவின் மேல் நிறுத்தப்பட்டது. அதன் எதிரே சாய்சதுர வடிவில் ஒரு யாக குண்டம், துணைக்கலசங்கள் 4, திருவிளக்குகள் 20, என இந்த யாகசாலையில் அமைக்கப்பட்டன.

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

“நாம் பிறந்து வளர்ந்து இதுவரை யாருக்கு என்னென்ன நன்மை செய்தோம் என்று அடிக்கடி நினைத்துப் பார்க்கும் பழக்கம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும்.”

சுடரில்…..

அன்னை அருளிய சக்கரங்களும் வேள்விகளும்

பகுதி : 4

பக்கம் - 1 – 4

□□□

UPCOMING EVENTS

Melbourne – Pg 7, 8, & 14
Sydney _ Pg 9
Brisbane _ Pg 13
Adelaide _ Pg 5

□□□

திருமதி அம்மா பதில்கள்

பக்கம் : 11

□□□

அருள்வாக்கும் அனுபவங்களும்…

பக்கம்: 5

□□□

Divine Miracles

Pg: 10

□□□

ஆன்மிக நாட்குறிப்பு

பக்கம் : 15

□□□

# அன்னை அருளிய சக்கரங்களும்....

## இரண்டாவது யாகசாலை

இரண்டாவது யாகசாலையில் அதியற்புதமான நாகசக்கரம், அதன் உடற்பகுதியில் நெல் நிரப்பப்பட்டிருந்தன. இதனைச் சுற்றிலும் கலசங்கள், திருவிளக்குகள். தாய்க்கலசங்கள் 8, சிறிய கலசங்கள் 72,அகல் விளக்குகள் 54, சங்குகள் 250, சக்கரத்தின் எதிரே தாமரை வடிவிலமைந்த யாக குண்டம்.

## மூன்றாவது யாகசாலை

மூன்றாவது யாகசாலையில் ஒரு வட்ட வடிவமான சக்கரம். அதற்குள்ளே அறுகோண வடிவில் ஒரு சக்கரம். அதற்குள்ளே நெல், வெல்லம், காய்கறி முதலான நிவேதனப் பொருட்கள் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தன. இச்சக்கரங்களைச் சுற்றி 60 கலசங்கள், 120 மண் கலசங்கள். இச்சக்கரங்களுக்கு எதிரே சாய்சதுரம், வட்டம், எண் கோணம் என்ற அமைப்பிலே மூன்று அடுக்குகள் கொண்ட அற்புதமான அமைப்பிலே ஒரு யாக குண்டம்.

## நான்காவது யாகசாலை

நான்காவது யாகசாலை ஈசானிய மூலையில் அமைந்திருந்தது. அங்கே ஆறு இதழ்த் தாமரை அடுக்குடன் ஒரு சக்கரம், அதன் மேல் இன்னொரு ஆறு இதழ் அடுக்கு கொண்ட ஒரு சக்கரம், இவற்றிற்கு வெளியே அறுகோணம். உள்ளே தாமரை வடிவிலான மேடை. அந்த மேடையிலே மஞ்சள் நிறப் பொற்கலசம் ஒன்று மின்னிக்கொண்டிருந்தது. சுற்றிலும் 132 திருவிளக்குகள். தனியாக ஒரு விநாயகர் கலசம். இவற்றின் எதிரே ஒரு யாக குண்டம். அதுவும் எப்படி? முக்கோண வடிவில் மூன்று அடுக்குகள் கொண்ட யாக குண்டம்.

## ஐந்தாவது யாகசாலை

தாமரை வடிவில் ஓர் அற்புதமான சக்கரம். அதுவும் எப்படித் தெரியுமா? 16 இதழ்கள் வெளியே, 8 இதழ்கள் உள்ளே. அதற்குள் ஒரு வட்டம். ஒரு ஸ்ரீ சக்கரம். மையத்தில் அறுகோணம். இடைவெளிகளில் உப்பு, துவரை, பச்சைப்பயிறு, உளுந்து முதலான நிவேதனப்பொருட்கள்.

மையத்தில் தாய்க்கலசம், அதனைச் சுற்றி ஆறு துணைக்கலசங்கள். நவக்கிரக கலசங்கள் ஒன்பது, மண் கலசம் 160, இதனை "ஐஸ்வரிய சக்கரம்" என்று விபரம் தெரிந்தவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தச் சக்கரத்தின் எதிரே மலர்ந்த தாமரைவடிவத்தில் ஒரு யாக குண்டம். அதுவும் எவ்வாறு? மூன்று அடுக்குகளாக அது அமைக்கப்பட்டிருந்தது.

## ஆறாவது யாகசாலை

இங்கே.. ஒரு வட்ட வடிவமான சக்கரம். அதற்குள்ளே சாய்சதுரம். அங்கே ஒரு மேடை. அதில் தாய்க்கலசங்கள் 5, அதனைச் சுற்றி 60 கலசங்கள், 42 விளக்குகள், 210 மண் கலசங்கள்.

இந்தச் சக்கரங்களின் இடைவெளியில் நெல்லும், பல்வேறு வண்ண வண்ண மலர்களும் நிவேதனமாகப் படைக்கப்பட்டன.

(தொடர்ச்சி....3ஆம் பக்கம்)

## அன்னை அருளிய சக்கரங்களும்....

இவற்றின் எதிரே ஒரு யாக குண்டம். சாய்சதுர வடிவில் ஒரு அடுக்கு. அதன் மேலே சதுரவடிவில் ஓர் அடுக்கு. அதன்மேலே சாய்சதுர வடிவிலே இன்னொரு அடுக்கு. மூன்று அடுக்கு கொண்ட யாக குண்டம் அது.

### எட்டாவது யாக சாலை

இந்த யாகசாலையின் உள்ளே... வட்ட வடிவிலான ஒரு சக்கரம். அதனுள்ளே சாய்சதுர வடிவில் மற்றொரு சக்கரம். அதற்கும் உள்ளே இன்னொரு சாய்சதுர வடிவில் ஒரு சக்கரம்.

இந்தச் சக்கரங்களில் நிறுவப்பட்ட கலச விளக்குகள் வருமாறு: தாய்க்கலசம் 5, துணைக்கலசங்கள் 108, மண் கலசங்கள் 108, குத்து விளக்குகள் 32, காமாட்சி விளக்குகள் 32,. இச்சக்கரங்களின் இடைவெளிகளில் காய்கறிகளும், பழங்களும் நிவேதனப் பொருளாக வைக்கப்பட்டு இருந்தன.

இச்சக்கரங்கள் எதிரே மூன்று அடுக்குகளால் அமைந்த யோனி குண்டம் நிறுவப்பட்டது.

### ஒன்பதாவது யாகசாலை

இந்த யாகசாலையில்... அறுகோண வடிவத்தில் ஒரு சக்கரம். அந்த அறுகோணங்களிலிருந்து கதிர்வீச்சுகள் புறப்பட்டு வருவது போல ஓர் அமைப்பு. அதற்குள்ளே டைமண்ட் வடிவத்திற்குள்ளேயே இன்னொரு டைமண்ட் வடிவில் மற்றொரு சக்கரம். இதனை ஆன்மிக குரு அடிகளார் அவர்களே வேள்விக் குழுவினர்க்குத் தம் கைப்பட வரைந்து காட்டி “இப்படிப்போடு” என்று சொல்லி அனுப்பினார்கள்.

இந்தச் சக்கரத்தின் நடுவே ஒரு தாய்க்கலசம். மண் கலசம் 56, இந்தச் சக்கரங்களைச் சுற்றி 72 குத்துவிளக்குகள், 72 சாதாரண விளக்குகள், 30 அகல் விளக்குகள்.

இந்தச் சக்கரத்தின் எதிரே ஒரு யாக குண்டம். எவ்வாறு தெரியுமா? ஏண்கோண வடிவத்தில் ஓர் அடுக்கு. அதற்கும் உள்ளே சதுர வடிவில் ஓர் அடுக்கு. இவ்வாறு மூன்றடுக்குகளால் அமைந்த யாக குண்டம் அது.

மாலை 6.00 மணியளவில் ஆன்மிக குரு அடிகளார் அவர்கள் யாகசாலைகளைப் பார்வையிட்டார்கள். தம் பார்வை மூலமாக அக்கலசங்கட்கும், விளக்குகளுக்கும் அருளைப் பாய்ச்சினார்கள்.

வேள்வி முடிந்த பிறகு பூசையில் வைக்கப்பட்ட அத்துணை கலச தீர்த்தங்களைக்கொண்டு அந்த மகாமகக் குளத்திற்கு அபிடேகம் செய்யப்பட்டது.

### பாரதத்தின் நன்மைக்கு டெல்லியிலே வேள்வி

1995ஆம் ஆண்டு அன்னை அறநிலையத்தாரை அழைத்து, டெல்லியிலே ஒரு வேள்வி நடத்த ஏற்பாடு செய்துகொள்ளும்படிப் பணித்தாள். அரசியல் கொந்தளிப்புகளும், இந்தியப் பெருநாட்டில் மதக்கலவரங்களும் வளர்ந்துவந்த காலம் அது. எனவே, ஏதோ ஒரு காரணம் பற்றி அன்னை இந்த வேள்விப்பூசை நடத்தப் பணிக்கிறாள் எனக் கருதி டெல்லியில் வேள்வி நடத்துவதற்கான ஆயத்தங்களில் ஆதிபராசக்தி அறநிலைப் பொறுப்பாளர்கள் ஈடுபட்டனர்.

புதுடெல்லி கிழக்கு கித்வாய் நகரில் அமைந்துள்ள ராம் லீலா மைதானத்தில் 27.01.1995 அன்று வேள்வி நடத்தத் தீர்மானமாகிவிட்டது. ஏறத்தாழ 1500 செவ்வாடைத் தொண்டர்களும், வேள்விக் குழத் தொண்டர்களும் டெல்லிக்குப் பயணமாயினர்.

27.01.1995 அன்று வேள்வி. 26.01.1995 அன்று குடியரசு தினம். அரசியல் தலைவர்களும், அரசாங்கமும், அமைச்சர் பெருமக்களும் குடியரசு விழாக் கோலாகலங்களில் மூழ்கியிருந்தனர்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## அன்னை அருளிய சக்கரங்களும்....

இந்நிலையில் 27.01.1995 அன்று ராம் லீலா மைதானத்தில் அந்த வேள்வி நடத்தப்பட்டது. இந்தப் பருவத்தில் டெல்லியில் குளிர் தாங்க முடியாதே! நம் ஊர்க்காரர்கள் அந்தக் குளிரைத் தாங்க மாட்டார்களே என்று டெல்லி தமிழர்கள் பரிதாபப்பட்டனர். ஆனால், நடந்தது என்ன? முதல்நாளே டெல்லியல் சீதோஷ்ண நிலையை மாற்றினாள் அன்னை. டெல்லித் தமிழர்களே அதுகுறித்து வியப்புத் தெரிவித்தனர்.

27.01.1995 அன்று காலை 7.00 மணியளவில் ஓம் சக்தி கொடி ஏற்றப்பட்டது.

மதியம் 12.00 மணியளவில் கோ பூசையுடன் வேள்வி தொடங்கப்பட்டது. 1008 தமிழ் மந்திரங்கள் இந்தியிலே மொழி பெயர்க்கப்பட்டு அந்த மந்திரங்களைக்கொண்டே வேள்வி தொடங்கப்பட்டது. இந்தியிலேயே வேள்விப்பூசையின் நோக்கம் சங்கல்ப்பங்கள் கூறப்பட்டன.

டெல்லியில் முக்கியப் பிரமுகர்கள் சிலரும் வடநாட்டுக் குடும்பங்களும் டெல்லி தமிழர் குடும்பங்களும், பத்திரிகையாளர்களும் அன்றைய வேள்வியிலே கலந்து கொண்டனர்.

வேள்வி நிறைவடையும் வேளையிலே... அந்த யாகசாலைக்கு மேலே ஏழு கருடன்கள் வட்டமிட்டு வளைய வந்தன. விபரம் புரிந்தவர்கட்கு அதன் அருமை தெரியும்.

அந்த வேள்வியிலிருந்து ஆன்மிக ஜோதி ஏற்றப்பட்டு, 108 தொண்டர்கள் சைக்கிள் பயணம் மேற்கொண்டு மருவத்தூர் வந்தடைந்தனர்.

இந்த வேள்வி ஏன்? இதன் முக்கியத்துவம் என்ன? என்று அன்னை நமக்குத் தெளிவாக அறிவிக்காவிட்டாலும், இந்து பத்திரிகையில் வந்த ஒரு செய்தியை வைத்து அந்த வேள்வியின் முக்கியத்துவத்தை ஓரளவு ஊகிக்க முடிந்தது.

### 08.02.1995 அன்று இந்து ஆங்கில நாளேடு

08.02.1995 அன்று வெளிவந்த "இந்து" ஆங்கிலப் பத்திரிகையில், இந்தியாவின் தலைக்கு மேல் எப்போதும் ஒரு கத்தி தொங்கிக்கொண்டிருப்பதை ரோஜர் பில்காம் என்ற விஞ்ஞானி தெரிவித்திருப்பதாகச் செய்தி வந்தது.

இமாலயப் பகுதியில் எப்போதும் எந்த நிலையிலும் ஒரு பூகம்பம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், அது ஏற்பட்டால் 20 கோடி மக்கள் அழிந்து போகும் நிலைமை ஏற்படும். மிகப்பெரிய அணைக்கட்டுகள் எல்லாம் உடைந்து நொறுங்கிப்போகும் என்றும் அவர் எச்சரித்து இருக்கிறார். இந்துவில் வந்த செய்தி இது.

"A Massive earthquake could hit the central Himalayan region of India at any time, geophysicist warned recently. Armed with data collected using the latest satellite technology and historical records dating from the British Raj, geophysicist now believe that the central Himalayas in India are due to suffer a quake of magnitude eight or nine, which would devastate a region with a population of more than 200 million and several major dams "It's like the sword of Damocles hanging over you" says Roger Bilham of the University of Colorado at Boulder…

Geophsicists have been warning of the possibility of a great earth quake for years, based on theoretical calculations of continental movements. "The Indian government has down played these warnings". Says Bilham, "but the new data may convince it to take them more seriously". A theoretical result can be tossed out the back door by a politician, he says "but real result can't be refuted so easily".

("The Hindu" – dated 8.2.1995 'Science and Technology')

ஒருபுறம் இந்து பத்திரிகையின் இந்தச் செய்தி! இன்னொரு புறம் நம் சித்தர்பீடத்தில் ஆன்மிகப் பணிகளைக் கொச்சைப்படுத்தி எழுதும் பத்திரிகை ஒன்று வழக்கம்போல கிண்டல் செய்தும் எழுதியிருந்தது.

(அடுத்த சுடரில் தொடரும்)

## Adelaide – Mandram – Upcoming Events – October 2012

### Melmaruvathur Adiparasakthi Worship Centre - Adelaide

4/49 Adelaide Tce – Ascot Park – SA 5043
Contact: 08-72258010

**Worship – Joint Prayer:** Every Third Sunday

| | | | |
|---|---|---|---|
| 28.10.2012 | Sunday-ஞாயிறு | 10.00a.m. | **Joint Prayer - கூட்டு வழிபாடு** |

"உலகமெல்லாம் சக்தி நெறி ஓங்க வேண்டும். ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்."

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## பெண் குழந்தை என்றால் அவ்வளவு கேவலமா?

கோவையை அடுத்துள்ள ஊரில் இருந்து ஒரு பெண்மணி அன்னையை நாடி வந்தார். பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதன்பின்னர் அவருக்கு ஆண் குழந்தையே இல்லை. ஆனாலும், ஆண் குழந்தை வேண்டும் என்றே அவர் பைத்தியமாக அலைந்தார். அன்னையின் பெருமை பற்றிக் கேள்விப்பட்டுக் கோயிலுக்கு வந்தார்.

அருள்வாக்குக்காக உள்ளே நுழைந்தவுடனே அன்னை "மகளே! உன் மனக்கவலையை விடு! உனக்கு ஆண் சந்ததி தருகிறேன். இதனை நீ நம்பியிரு" என உறுதிகூறி அனுப்பினாள்.

மூன்று மாதமாகியும் அன்னை சொல்லியபடி நடக்காமையால் மறுபடி அப்பெண்மணி அன்னையிடம் வந்தாள். "என் வார்த்தையில் நம்பிக்கை வைத்து உறுதியாக இரு" எனக் கூறியனுப்பினாள் அன்னை. அடுத்த மாதமே அப்பெண் கருவுற்றாள்.

நான்கு மாதம் முடிந்தவுடன், அது பெண் குழந்தையாகவும் இருக்கலாம் என்று பலர் கூறியதால், அப்பெண் மனக்கிலேசத்துடன் அன்னையிடம் வந்து தன் கவலையை வெளியிட்டாள்.

"மகளே! ஏன் கவலைப்படுகிறாய்? பெண் குழந்தை என்றால் அவ்வளவு கேவலமா? ஒரு வேளை பெண் பிறந்துவிட்டால் சாக்கடையிலா எறிந்துவிடுவாய்? நீ போகலாம்" என்று கூறி அனுப்பிவிட்டாள். அந்தப்பெண் வெளியே வந்து அழத்தொடங்கிவிட்டாள்.

அன்னை தொண்டர் ஒருவரை அழைத்து "மகனே! அப்பெண்ணுக்கு ஆண் குழந்தைதான் தந்துள்ளேன். ஆனால், அவள் என்மேல் நம்பிக்கையில்லாமல் திருப்பிதிருப்பிக் கேட்டதால், பெண் குழந்தை பிறந்தால் சாக்கடையில் போட்டுவிடுவாயா? என்று கேட்டு அனுப்பிவிட்டேன். நான்கு நாட்கள் அவதிப்படட்டும், நீ ஒன்றும் சொல்லாதே! அதன்பிறகு நான் கூறியதை எடுத்துச் சொல்லி மகிழ்ச்சியுடன் இருக்குமாறு செய்! நான்கு நாட்கள் அவள் நம்பிக்கையின்மைக்குரிய தண்டனையை அனுபவிக்கட்டும்" என்று கூறினாள். தொண்டரும் அவ்வாறே செய்தார். அப்பெண் 1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் அழகிய ஆண் குழந்தை ஒன்றைப் பெற்று மகிழ்ச்சியில் திளைத்தார்.

**அன்னையின் அருள்வாக்கு:**

" நவராத்திரி விழா நாட்களில் இரண்டு வேளை மட்டுமே உணவு உண்டு அகண்ட சோதியை தரிசனம் செய்ய வேண்டும் "

## ஆண்டாண்டு காலமாய்......

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த முறை அந்த விளக்கை ஏந்தி வர நம்மை அழைக்கமாட்டாளா? அந்தப் பாக்கியம் நமக்கு கிட்டாதா? அதன் மூலம் நம் வேதனைகள் தணியாதா? என்ற எதிர்பார்ப்பு ஆடவர்களுக்கும், மகளிர்க்கும் இப்படி உள்ளூர ஓர் எதிர்பார்ப்பு.

அம்மா தாயே! இந்த முறை என்னை அழைக்கக்கூடாதா? அருள்திரு அடிகளார் பெருமானே! எங்களுடைய குருபிரானே! நடமாடும் அன்னையே! என் மீது இரக்கம் காட்டி எனக்கும் அந்தப் பாக்கியத்தை அன்னையிடம் பெற்றுத் தரக் கூடாதா? என மானசீகமாகக் கெஞ்சும் கெஞ்சல்கள்! இங்ஙனம் எல்லோரும் பரிதவிக்க, அன்னையோ கருவறையிலிருந்து ஒய்யாரமாக வெளிப்பட்டு வருகிறாள். அந்தத் திருமேனியின் ஈர்ப்பு எட்டுத் திசையிலும் பரவுகின்றது!

உலக நாயகியாம் அன்னை, நடமாடும் அன்னையான நம் அடிகளார் திருமேனியை ஆட்கொண்டதும் நடந்து வருகிற அந்த நடையை பார்க்கவேண்டுமே? எங்கிருந்துதான் வருமோ அப்படி ஒரு நளினம்? யாருக்கு இதெல்லாம் தெரிகிறது?

அவதாரத் திருமேனியை ஆட்கொண்ட அன்னை, இப்போது கருவறைக்குள்ளே சென்று ஊர்ந்தபடி நகர்கிறாள்? எப்படி? சர்ப்ப உருவில் மட்டுமே அந்த வளைவுகளும் நெளிவுகளும் சாத்தியமாகும்! திடீரென்று சுயம்பிற்குத் தன் நாக்கினால் உருவேற்றுகின்றாள்! சடாரென்று அகண்ட விளக்கை நோக்கித் திரும்புகின்றாள். அதுவரையில் ஏற்றப்படாமலிருந்த திரி, அகண்ட விளக்கின் மீது நீட்டிக்கொண்டிருக்கிறது.

**என்ன அற்புதம் இது? எத்தகைய அற்புதம் இது? தனது வாயினால் அந்தத் திரியைப் பற்றித் தனது நாவினால் தீண்டுகிறாள் அன்னை!**
**உடனே தானே பற்றிக்கொண்டு எரிகிறது அகண்ட தீபம்!**

**இது ஆண்டாண்டு காலமாய் அன்னை நமக்குக் காட்டும் அற்புதம்!**


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

ஆண்டுச்சந்தா ரூபா ₹ 120.00 (இந்தியா)
ஆயள் சந்தா ரூபா ₹ 1600.00 (இந்தியா)

வெளிநாட்டுச் சந்தா இந்திய ரூபா ₹ 1500.00 (இரண்டு ஆண்டுகள்)

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.
உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli'Office, Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,Tamil Nadu, South India.

# Melbourne - Mandrams – Upcoming Events – October 2012

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0411881024, 0433440194, 0417113082

## October - புரட்டாசி - ஐப்பசி

## கூட்டு வழிபாடுகள்:

| Clayton | Dandenong |
|---|---|
| செவ்வாய் - Tuesday:<br>**Subud Centre,**<br>164 Elder Street South – Clarinda 3169<br>(Mel.Ref.: 78 J 9) | ஞாயிறு – Sunday:<br>**Menzies Hall**<br>Latham Cr.(Cnr.Deakin Cr.) – Dandenong 3175<br>(Mel.Ref.: 90 C 01) |

### Clayton

| | | | | |
|---|---|---|---|---|
| 02.10.2012 | Tuesday | புரட்டாசி | 16 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| 09.10.2012 | Tuesday | புரட்டாசி | 23 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| 16.10.2012 | Tuesday | புரட்டாசி | 30 | **Joint Prayer – கூட்டு வழிபாடு – நவராத்திரி ஆரம்பம்** 7.30p.m. – 9.00p.m. |
| 23.10.2012 | Tuesday | ஐப்பசி | 07 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. **அன்னைக்கு மரக்கறி அலங்காரம்** |
| 30.10.2012 | Tuesday | ஐப்பசி | 14 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |

### Dandenong

| | | | | |
|---|---|---|---|---|
| 07.10.2012 | Sunday | புரட்டாசி | 21 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** 10.30a.m. – 12.00p.m. "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு |
| 14.10.2012 | Sunday | புரட்டாசி | 28 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** 10.30a.m. – 12.00p.m. "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு |
| 28.10.2012 | Sunday | ஐப்பசி | 06 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** 10.30a.m. – 12.00p.m. "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு |
| 28.10.2012 | Sunday | ஐப்பசி | 12 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** 10.30a.m. – 12.00p.m. "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு |

## அன்னையின் அருள்வாக்கு:

**"நவராத்திரி அகண்ட விளக்கு எண்ணெயை எடுத்துச் சென்று,
அதில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து,
உங்கள் வீட்டில் ஒன்பது இடங்களில் விளக்கேற்றி வைக்க வேண்டும்"**

**"முன்வாசல், பின்வாசல், பூசையறை, பணம் இருக்கும் இடம், அடுப்படி முதலிய முக்கியமான ஒன்பது இடங்களில் விளக்கேற்றி வைக்க வேண்டும்"**

# Melbourne - Mandrams – Upcoming Events – October 2012

## Vermont South

### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

### நவராத்திரி கால கூட்டு வழிபாடுகள்

**Glen Weverley Scout Hall**,
Whites Lane – Glen Waverley 3150 – (Mel.Ref.: 71 D 7)

நவராத்திரி 9 நாட்களும் சிறப்பு அலங்காரங்களுடன் குங்கும இலட்சார்ச்சனை, வழமையான நவராத்திரி சிறப்பு அம்சங்களுடன் வழிபாடுகளும் இடம்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| 16.10.2012 | செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 1ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 17.10.2012 | புதன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 2ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 18.10.2012 | வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 3ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 19.10.2012 | வெள்ளி | Open from 7.30p.m. – Until Agandam Kulirviththal | "அகண்டம் தீபம் ஏற்றல்" நவராத்திரி 4ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 20.10.2011 | சனி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 5ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 21.10.2011 | ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | "அகண்டம் தீபம் குளிர்வித்தல்" நவராத்திரி 6ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 22.10.2011 | திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 7ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 23.10.2011 | செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 8ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 24.10.2011 | புதன் | 7.30p.m. – 9.30p.m. | விஜயதசமி நவராத்திரி 9ஆம் நாள் கூட்டு வழிபாடு |

**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House**,
Karobran Drive – Vermont South 3133 – (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| **05.10.2012** | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| **12.10.2012** | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| **26.10.2012** | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| **29.10.2012** | MONDAY- திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |

## Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road – Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| **07.10.2012** | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| **21.10.2012** | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**அன்னையின் அருள்வாக்கு**

"நவராத்திரி விழாவன்று செய்யப்படும் அபிடேகத் தீர்த்தத்தை எடுத்துச் சென்று உங்கள் வீடுகளில் தெளிக்க வேண்டும்"

# Sydney - Mandrams - Upcoming Events – October 2012

## □□□ Homebush

### Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre

Contact: 02-97643872, 0416217317

**Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall) – Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 05.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.10.2012 | MONDAY- திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>“பௌர்ணமி விளக்குப் பூஜை” |

## □□□ Westmead


### Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW (Australia)

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School – Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 05.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.10.2012 | SATURDAY-சனி | 10.00a.m. | “அகண்ட தீபம்” ஏற்றல் |
| 26.10.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.10.2012 | MONDAY- திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>“பௌர்ணமி விளக்குப் பூஜை” |



ஓம் சக்தி!

# “சக்தி அலை”

இன்பத்தமிழ் வானொலி 24 மணி நேர அலை ஊடாக

**பிரதி செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னையின் அருளாட்சி, அற்புதங்கள், அருள்திரு ஆன்மிககுரு பங்காருஅடிகளார் நடத்தும் ஆன்மிக புரட்சி, பக்தர்கள் வாழ்வில் நடந்தேறும் அற்புதங்கள்.... என்று தொகுப்புகள், வர்ணனைகள், பக்தி பாடல்கள், ஆன்மிக விளக்கங்கள், மேலும் பல அரிய விடயங்களை செவிமடுத்து அருள்வளம் பெறுங்கள்.

அனுசரணை:
மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் நியுசவுத்வேல்ஸ் அவஸ்திரேலியா

# Divine Miracles at Melmaruvathur

### Lesson taught for pride:

In the early days Mother used to give divine revelations with the red brigade around Her. She used to talk about a variety of subjects right from the administration of the Siddha Peetam, arrangement for ceremonies, spiritualism, philosophy, affairs of the country, world affairs and so on.

Once she said "Take photographs of the events that take place here and keep them with you. Make arrangements for the same! A man specially for this purpose will come here" and she gave his specifications.

The photographer came as mentioned by Mother. He was Sakthi Bhaktavatsalam from Choolai Royal Studio. Devotees requested him to photograph the Adi Pooram Ceremony and Mother rolling down the corridor. The rolling down the corridor was a very exciting event during Adi Pooram.Mother came from the Sanctum Sanctorum quick and agile like a serpent. It was very difficult to photograph this. The devotees instructed the photographer to be careful and take a good photograph. The photographer did not like this. He was irritated. He thought to himself "I have been in the cinema field for several years and I have been a phototapher for a very long time. These people are ordering me. Can't I take a photograph as they have told me?" However he controlled himself. Adigalar came and stood inside the Sanctum Sanctorum ready for rolling. The photographer got ready to take the photograph.

When Mother Swayambhu jumped up the photographer could only see a ball of light coming out. He fell down and fainted when he saw that scene. He could not take a photograph. People attended to him and he regained consciousness. By this time the rolling down the corridor ceremony was over. The next day Mother asked that devotee, "What my son! Is there anything impossible for us? You were ao egoistic before taking the photograph. You have yourself seen that you couldn't do it. You cannot photograph with an inflated ego! You can do so only if you have my blessing. Now wait for the next Adipooram ceremony for the photograph". She ordered him to come and photograph all the events that took place there.

*****

**அன்னையின்
அருள்வாக்கிலிருந்து..**

## நவராத்திரி அகண்டம்

"உலகத்திற்குப் பலன் உண்டாகவும், உலகத்திற்கு ஒளி தேவை என்பதற்காகவும், மழை தேவை என்பதற்காகவும், ஆன்மிகம் வளர வேண்டும் என்பதற்காகவும் அகண்டம் ஏற்றப்படுகிறது.
ந வ ரா த் தி ரி அகண்டம் அகந்தையை அடக்கும் அமைதியைக் கொடுக்கும்."



# திருமதி அம்மா பதில்கள்

இலட்சுமி பங்காரு அடிகளார்

**ஆசையே துன்பத்திற்குக் காரணம். அப்படியென்றால் ஆசையின் அளவு எது? ஆசை இருந்தால்தானே சிகரத்தை எட்ட முடியும்?**

ஆசை இருந்தால்தான் நினைத்ததைச் சாதிக்க முடியும். தேவைக்கு மேல் ஆசை இருக்கக்கூடாது. தேவைக்கு மேற்பட்ட ஆசையே துன்பத்தைக் கொடுக்கும். ஆசை இருக்கலாம். அது பேராசையாக மாறும்போதுதான் துன்பம் ஏற்படுகிறது. போதும் என்ற மனம் இருந்தால் பேராசை தலைதூக்காது.

**அம்மா! தாங்கள் ஆசிரியையாகப் பிள்ளைகளிடம் கேள்வி கேட்கும்பொழுதும், டிவி, பத்திரிகைகள் போன்ற மீடியாக்கள் உங்களிடம் கேள்வி கேட்டுத் தாங்கள் பதில் கூறும்போதும் தங்களின் மனநிலை எவ்வாறு உள்ளது?**

நான் பிள்ளைகளிடம் கேள்வி கேட்கும்போது ஆசிரியர் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும். மீடியாக்கள் என்னிடம் கேள்வி கேட்கும்போது மாணவி என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும். ஆசிரியர் என்ற நிலையில் இருக்கும்போது சரியான பதிலை மனதில் வைத்துக்கொண்டு, மாணவர்கள் சரியாகப் பதில் கூறுகிறார்களா? என்று சோதிக்கும் மனப்பான்மையில் இருந்தேன். மீடியாக்கள் என்னைக் கேள்வி கேட்கும்போது அம்மாவைப் பற்றியும், நிர்வாகத்தின் செயல்பாடு குறித்தும் சரியாகப் பதில் சொல்ல வேண்டும் என்ற பதட்டமான மனநிலையில் இருப்பேன்.

**சக்திமாலை அணிந்து கொண்டபின், நமது சித்தர்பீடத்திற்குப் பணி செய்ய வரும்பொழுது, இருமுடி செலுத்தும்வரை, கருவறையில் உள்ள அன்னையை நேருக்கு நேர் பார்த்துத் தரிசனம் செய்யக்கூடாது என்று கூறுகிறார்கள். இதுபற்றி விளக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.**

சக்திமாலை அணிந்துகொண்டபின் நமது சித்தர் பீடத்திற்குப் பணி செய்ய வருபவர்கள் பணி துவங்குவதற்கு முன்தினமே தங்கள் சக்திமாலையைச் செலுத்தி விடுவார்கள். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் சக்தி மாலை அணிந்தவர்கள் சித்தர் பீடம் வர நேர்ந்தால் கருவறைக்குச் சென்று நேருக்குநெர் அம்மனைத் தரிசிக்க மாட்டார்கள். அம்மா கூறுகின்ற விதிமுறைகளைப் பின்பற்றுவது பக்தர்களின் கடமையே தவிர, இதுவரை அம்மாவிடம் யாரும் விளக்கம் கேட்டதில்லை.

**பக்தி, உழைப்பு, ஒழுக்கம், கல்வி, அதிர்ஷ்டம் இதில் ஒருவன் வாழ்க்கையில் வெற்றியடைய எது அவசியம் தேவை?**

என்னைப் பொறுத்தவரை, ஒருவன் வாழ்க்கையில் வெற்றியடைய உழைப்பும் ஒழுக்கமும் அவசியம் தேவை என்று நினைக்கிறேன்.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

**ஓம் சக்தியே!**

**ஆதிபராசக்தியே!**



**ஆதிபராசக்தி சித்தர் பீடம்**

**மேல்மருவத்தூர்**

**2012**

**ஸ்ரீ கர - ஸ்ரீ நந்தன வருடம்**

## ஆலய சிறப்பு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| புரட்டாசி | 29 | 15.10.2012 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 30 | 16.10.2012 | செவ்வாய் | நவராத்திரி ஆரம்பம் |
| ஐப்பசி | 13 | 29.10.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஐப்பசி | 28 | 13.11.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 13 | 28.11.2012 | புதன் | பௌர்ணமி – கார்த்திகை தீபம் |
| கார்த்திகை | 27 | 12.12.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 28 | 13.12.2012 | வியாழன் | அமாவாசை |
| மார்கழி | 11 | 25.12.2012 | செவ்வாய் | கிறிஸ்மஸ் |
| மார்கழி | 14 | 28.12.2012 | வெள்ளி | பௌர்ணமி |

**அன்னையின் அருள்வாக்கிலிருந்து..**

## நவராத்திரி அகண்டம்

**"நவராத்திரி அகண்டத்திற்கு கண்டத்தை நிவர்த்திக்கும் தன்மை உண்டு"**

## அகண்டமும் ~ கண்டமும்

**அ**ண்டம், பேரண்டம், பிருமாண்டம் என்னும் அகில அண்டங்களையும் ஒரு சேரக்கொண்டது அகண்டம். ஏனைய தனித்தனிப் பகுதிகளாக உள்ளவை கண்டம். இவை அனைத்தையும் காத்து விளங்கும் பேரொளிப் பிழம்பாக உள்ளவள் அன்னை ஆதிபராசக்தி!

அந்தப்பேரொளிப் பிழம்பே பரஞ்சோதி! அந்தச் சோதியால் தான் சூரிய, சந்திர, அக்கினி மூன்றும் ஒளி பெறுகின்றன.

அண்ட வடிவில் சூரிய, சந்திர, அக்கினி வடிவில் உள்ள அன்னை நம் பிண்டத்திலும் அதாவது நம் உடம்பிலும் சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அக்கினி மண்டலமாக உள்ளாள். அண்டத்தின் பரஞ்சோதியாக இருக்கிற அவளே, நம் உடம்பில் ஆத்மா என்னும் சோதியாக உள்ளாள். நம் ஆத்மாவை அழுக்குகள் மூடிக்கொண்டிருப்பதால் நம்மிடம் பிரகாசம் இல்லை. அவளிடமிருந்து சிதறி வந்த ஒளிக்கற்றைகள் தாம் நாமும்.

இந்தத் தத்துவப் பொருள்களையெல்லாம் உணர்த்துகிற விழா நிகழ்ச்சிதான் இந்தச் சித்தர் பீடத்தில் அன்னை நவராத்திரி விழாவின்போது அகண்ட விளக்கை ஏற்றுகின்ற நிகழ்ச்சி!

## Brisbane – Mandram – Upcoming Events – October 2012



ஓம் சக்தி!

**Melmaruvathur Aadhiparasakthi Brisbane Mandram**
**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பிரிஸ்பேர்ண் மன்றம்**



**P.O.Box: 750, SumnerPark, BC, Qld 4074**

“Service and Devotion are the Eyes of Spirituality”
“Spirituality is knowing, understanding and realizing Thyself” – **Melmaruvathur Amma’s Oracle.**

**Bajan:**
**5.00p.m to 7.00p.m.**

**14.10.2012**
**Sunday**

**கூட்டுப்பிரார்த்தனை:**
மாலை 5.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை

ஞாயிற்றுக்கிழமை – புரட்டாசி 28

**1 Lalina Street**
**(Cnr of RiverHills Road & Lalina Street),**
**Middle Park – Qld 4074**

Contacts:

Sakthi Para
Mob: 0438 778 483

Sakthi Jayanthan
Mob.: 0402907064

Sakthi Kalyanasundaram
Mob.: 0411165067

**நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம் - நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்**

# நவராத்திரி

### லலிதாம்பிகை நவராத்திரி

இது வசந்த நவராத்திரி எனப்படும் பங்குனி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி கொண்டாடப்படும்.

### இராஜமாதங்கியின் நவராத்திரி

இது மாசி மாத அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி கொண்டாடப்படும்.

### மகா வராகியின் நவராத்திரி

இது ஆடி மாத அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி கொண்டாடப்படும்.

### சாரதா நவராத்திரி

இது புரட்டாசி மாதம் நடைபெறும் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி மூவருக்கும் கொண்டாடப்படும்.

# Melbourne - Mandrams – Upcoming Events – October 2012

**Mulgrave**

## Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

**Southern Community Centre,**
Rupert Drive – Mulgrave 3170
(Mel.Ref:: 80 F 5)

**Joint Prayers: Every Sunday**

| | | | |
|---|---|---|---|
| 07.10.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 14.10.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |

## நவராத்திரி உற்சவம்

**20.10.2012 சனிக்கிழமை**

**காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**

| | | | |
|---|---|---|---|
| 21.10.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 28.10.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |

### நல்லவர்கள் துயரப்பட்டுக்கொண்டு இருப்பதற்கும் தீயவர்கள் சுகமான வாழ்க்கை வாழ்வதற்கும் காரணம் என்ன?

### இதனை விதி என்பதா? இறைவனின் சோதனை என்பதா?

ஒரு அன்பர் அன்னையிடம், நல்லவர்கள் துயரப்பட்டுக்கொண்டு இருப்பதற்கும் தீயவர்கள் சுகமான வாழ்க்கை வாழ்வதற்கும் காரணம் என்ன? இதனை விதி என்பதா? இறைவனின் சோதனை என்பதா? என்று கேட்டார்.

அதுகேட்டு அன்னை அந்த அன்பரையே திருப்பிக்கேட்டாள். ‘நல்லவன் என்பவன் என்று நீ நினைக்கிறவன் ஆன்ம பரிபக்குவம் எப்படிப்பட்டது என்பது உனக்குத் தெரியாது மகனே! எனக்குத் தெரியும்’ என்று சொல்லிவிட்டு அன்னை தொடர்ந்தாள்.

‘எனக்கு நல்லவன் யார் தெரியுமா மகனே! எவன் மனதில் ஆசை, பாசம், சூது, சூழ்ச்சி, பொறாமை, பகை இல்லையோ அவன்தான் எனக்கு நல்லவன். சாக்கடை ஓரத்தில் சித்தப்பிரமை பிடித்துக்கிடக்கிறானே அவன்தான் எனக்கு நல்லவன். அவன் மனதில்தான் அழுக்கு இல்லை. ஆசையில்லை, பாசமில்லை, சூது இல்லை, சூழ்ச்சி இல்லை, பகையில்லை, பொறாமை இல்லை. அவன்தான் எனக்கு நல்லவன்’ என்றாள்.

பின் மேலும் சொல்லத் தொடங்கினாள். “முற்பிறவியில் செய்த புண்ணியம் காரணமாகச் சிலருக்குச் செல்வத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது மகனே! அவ்வாறு செல்வத்தைப் பெற்றவன், இது தெய்வம் கொடுத்து வந்த செல்வம் என்று நினைத்து அனைவருக்கும் தருமம் செய்ய வேண்டும் மகனே! மாறாக அகங்காரம் கொண்டு ஏழைகட்குத் துன்பம் விளைவிப்பானேயானால் அவனை எப்படி அழிப்பேன் தெரியுமா மகனே?’ என்று ஒரு கேள்வி கேட்டு நிறுத்தினாள் அன்னை. ‘அவனுக்கு எதனால் அகங்காரம் வந்தது மகனே?’ என்று அந்த அன்பரைத் திருப்பிக் கேட்டாள். ‘செல்வத்தின் காரணமாக தாயே!’ என்றார் அந்த அன்பர். “அவன் அகங்காரத்தை அழிக்க நான் என்ன செய்வேன் தெரியுமா?” என்று கேட்ட அன்னை சொன்னாள்.

(தொடர்ச்சி…16ஆம் பக்கம்)

# ஆன்மிக நாட்குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 06.10.2012 | சனி | புரட்டாசி | 20 | புரட்டாசி சனி விரதம் 3வது வாரம் |
| 13.10.2012 | சனி | புரட்டாசி | 27 | புரட்டாசி சனி விரதம் 4வது வாரம் |
| 15.10.2012 | திங்கள் | புரட்டாசி | 29 | அமாவாசை |
| 16.10.2012<br>முதல்<br>25.10.2012 | செவ்வாய் | புரட்டாசி | 30 | நவராத்திரி ஆரம்பம்<br>நவராத்திரி கால வழிபாடுகள் – 9 நாட்கள்<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 20.10.2012 | சனி | ஐப்பசி | 04 | நவராத்திரி உற்சவம்<br>காலை 8.00 மணி முதல் 8.00 வரை<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 24.10.2012 | புதன் | ஐப்பசி | 08 | விஜயதசமி |
| 29.10.2012 | திங்கள் | ஐப்பசி | 13 | பௌர்ணமி விளக்குப் பூஜை<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 04.11.2012 | ஞாயிறு | ஐப்பசி | 19 | திருவிளக்குப்பூஜை<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 13.11.2012 | செவ்வாய் | ஐப்பசி | 28 | அமாவாசை – தீபாவளி பண்டிகை |
| 17.11.2012 | சனி | கார்த்திகை | 02 | நாக சதுர்த்தி |
| 18.11.2012 | ஞாயிறு | கார்த்திகை | 03 | ஷ்கந்த சஷ்டி |
| 27.11.2012 | செவ்வாய் | கார்த்திகை | 12 | கார்த்திகை தீபம் – திருவண்ணாமலை தீபம் |
| 28.11.2012 | புதன் | கார்த்திகை | 13 | பௌர்ணமி விளக்குப் பூஜை<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 02.12.2012 | ஞாயிறு | கார்த்திகை | 17 | இராகு – கேது பெயர்ச்சி<br>திருவிளக்குப்பூஜை<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 12.12.2012 | புதன் | கார்த்திகை | 28 | அமாவாசை வேள்வி |
| 24.12.2012 | திங்கள் | மார்கழி | 09 | வைகுண்ட ஏகாதசி |
| 25.12.2012 | செவ்வாய் | மார்கழி | 10 | கிறிஸ்மஸ் பண்டிகை<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 28.12.2012 | வெள்ளி | மார்கழி | 13 | ஆருத்ரா தரிசனம்<br>பௌர்ணமி விளக்குப் பூஜை<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 30.12.2012 | ஞாயிறு | மார்கழி | 17 | திருவிளக்குப்பூஜை<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 01.01.2013 | செவ்வாய் | தை | 17 | ஆங்கிலப் புதுவருடம் |
| 11.01.2013 | வெள்ளி | மார்கழி | 27 | அமாவாசை |
| 15.01.2013 | செவ்வாய் | தை | 01 | தைப்பொங்கல் |
| 27.01.2013 | ஞாயிறு | தை | 13 | பௌர்ணமி விளக்குப் பூஜை<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம்<br>திருவிளக்குப்பூஜை<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 10.02.2013 | ஞாயிறு | தை | 27 | அமாவாசை |
| 25.02.2013 | திங்கள் | மாசி | 13 | பௌர்ணமி விளக்குப் பூஜை<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 03.03.2013 | ஞாயிறு | மாசி | 19 | ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவதாரத்திருநாள்<br>அவுஸ்திரேலிய அனைத்து ஆதிபராசக்தி மன்றங்களிலும் விழாக்கள், பாத பூசை, கூட்டு வழிபாடு<br>திருவிளக்குப்பூஜை<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |

# நவராத்திரி கொலு

நவராத்திரி கொலு வைப்பதில் ஒரு தத்துவம் உள்ளது. ஒன்பது படிகள் வைத்து ஒவ்வொரு படியிலும் பின்வருமாறு பொம்மைகளை வைத்து மனிதன் படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்று, கடைசியில் தெய்வமாக வேண்டும் என்கிற தத்துவத்தை இப்படிகளும், பொம்மைகளும் சித்தரிக்கின்றன.

நவராத்திரி கொலுவைப் பராசக்தியின் ‘‘விஸ்வரூப தரிசனம்’’ என்று கூறலாம். ‘‘எல்லாமாக இருப்பவள் நானே’’ என்பதைப் பராசக்தி அந்தக் கொலு பொம்மைகள் வாயிலாக உணர்த்துகிறாள். **நவராத்திரி கொலுவின் தத்துவம் இதுவே!**

| | |
|---|---|
| 9ஆவது படி | பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகள் அவர்கள் தம் தேவியர்களான சரஸ்வதி, இலட்சுமி, பார்வதி ஆகியோர் இருத்தல் வேண்டும். **ஆதிபராசக்தி நடுநாயகமாக இருத்தல் வேண்டும்.** |
| 8ஆவது படி | **தேவர்களின் உருவங்கள், நவக்கிரக அதிபதிகள், பஞ்சபூத தெய்வங்கள், அட்டதிக்கு பாலகர்கள்** என்பன இடம்பெறவேண்டும். |
| 7ஆவது படி | **மனிதனுக்கு மேற்பட்ட மகரிஷிகளின் பொம்மைகள்** இடம்பெற வேண்டும். |
| 6ஆவது படி | **ஆறறிவு படைத்த உயர்ந்த மனிதர்களின் பொம்மைகள்** இடம்பெற வேண்டும். |
| 5ஆவது படி | ஐயறிவு கொண்ட உயிர்கள் அனைத்தும் இடம்பெற வேண்டும். **நாற்கால் விலங்குகள், பறவைகள் என்பன** |
| 4ஆவது படி | நான்கறிவு கொண்ட உயிர்களை விளக்கும் பொம்மைகள் **நண்டு, வண்டு என்பன** |
| 3ஆவது படி | மூவறிவு கொண்ட உயிர்களை விளக்கும் பொம்மைகள் **சிப்பி, எறும்பு என்பன** |
| 2ஆவது படி | ஈறறிவு கொண்ட உயிர்களை விளக்கும் பொம்மைகள் **நத்தை, சங்கு என்பன** |
| 1ஆவது படி | ஓரறிவு உயிர்ப்பொருள்களை உணர்த்தும் பொம்மைகள் **புல், செடி, கொடி, தாவரம் என்பன** |

## நல்லவர்கள் துயரப்பட்டுக்கொண்டு இருப்பதற்கும் தீயவர்கள் சுகமான வாழ்க்கை வாழ்வதற்கும் காரணம் என்ன?

(.14ஆம் பக்க தொடர்ச்சி)

‘‘மேலும் மேலும் செல்வத்தைக் கொடுப்பேன். அகங்காரத்தைக வளர்த்துக்கொண்டே போவேன். இந்தச் செல்வமும் அவனைக் காப்பாற்ற முடியாதபடி ஒரு சூழ்நிலையை உண்டாக்குவேன். அப்படியே அழிப்பேன்’’ என்றாள் அன்னை.

இந்த அருள்வாக்கினை அடிப்படையாகக்கொண்டு புராணக் கதைகளைப் பாருங்கள். ஓர் உண்மை புரியும். ஏழு மரங்களை ஓர்அம்பினால் துளைத்த வில்லாற்றல் படைத்த இராமன் அனைவரும் எடுத்து வளைக்கவே அஞ்சிய வில்லை முறித்த இராமன், இராவணனை ஓர் அம்பால் கொன்றிருக்க முடியாதா? முடியும்! அகங்காரத்தை வளரவிட்டே அழித்தான். சூரபத்மனை ஒரு நொடியில் முருகன் அழித்திருக்க முடியாதா? முடியும். ஏன் செய்யவில்லை? அகங்காரத்தை வளரவிட்டு அழிப்பதுதான் தெய்வத்தின் நோக்கம். இந்தப் பின்னணியில் அதிகார மமதையோடு ஆட்டம் போடுபவர்களைப் பார்த்தால் உண்மை புரியும்.

தெய்வத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாத அப்பாவி மக்கள் ‘இவ்வளவு ஆட்டம் போடுகிறான். இதையெல்லாம் தெய்வம் பார்த்துக்கொண்டிரக்கிறது. தெய்வம் இவர்கட்கெல்லாம் உடனே கூலி கொடுக்கவில்லை. உம்! தெய்வமாவது மண்ணாவது!’ என்று விரக்தியோடு பேசுகிற நிலைக்கு வருவார்கள். கருமச் சட்டத்திலிருந்து எந்தக் கொம்பனாலும் தப்பிக்க முடியாது. தீயவர்கள் ஆட்டம் அணையுமுன் விளக்கு பிரகாசமாக எரிவது போன்றது. அவ்வளவுதான்!